2006 ஆகஸ்ட் 22]

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி உழவர் சந்தையைப் பற்றியது. எனவே, நான் அடுத்த கேள்விக்குக் கையை உயர்த்தலாம் என்றிருந்தேன். நான் கையை உயர்த்தியது, மின்சாரத் துறைக்காகக் கையை உயர்த்தினேன். மின்சாரத் துறையிலே கேள்வி கேட்பதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. உழவர் சந்தை என்பது முக்கியமான ஒன்று. குறிப்பாக காங்கேயம் மிகப் பெரிய தொகுதி. எனவே, அடுத்த கேள்வி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். வினா எண் 64, திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

64—

உழவர் சந்தை

***1580—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டையில் விவசாயிகளின் நலன் கருதி உழவர் சந்தை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்சமயம் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் உழவர் சந்தைகள் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால், தேன்கனிக்கோட்டைப் பகுதியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) வினா எழவில்லை.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை, தளி பகுதிகளில் காய்கறிகள் விளையக்கூடிய நல்ல சீதோஷ்ண நிலை இருப்பதால், பீட்ரூட், கேரட், முட்டைக்கோஸ், காலிஃபிளவர் போன்ற காய்கறிகள் அதிக அளவிலே உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்திலே உள்ள மற்ற மாவட்டங்களுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. ஆகவே, அந்தப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி, தேன்கனிக்கோட்டையில் உழவர் சந்தை

அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, அதேபோல, விவசாயிகள் அல்லாதவர்கள், போலியாக உழவர் அட்டைகளைப் பெற்று உழவர் சந்தையிலே பயன்படுத்தி வருகின்றனர். ஆகவே, அத்தகைய முறைகேடுகளைத் தடுக்க, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தையை அமைக்க நடவடிக்கை எடுக்கும்போது, காய்கறி உற்பத்தி அளவையும் கணக்கிடுகிறோம். நுகர்வோர்களுடைய எண்ணிக்கையையும் கணக்கிட்டு அந்த உழவர் சந்தையைத் தொடங்கினால்தான் இலாபத்திலே நடைபெறும். அந்த அடிப்படையிலே, தேன்கனிக்கோட்டை கிராமத்திலே, மொத்த மக்கள்தொகை 19,328 பேர் என்றும், மொத்தக் காய்கறி சாகுபடிப் பரப்பு 2,125 எக்டேரில், 23,375 மெட்ரிக் டன் உற்பத்தி ஆனாலும், மக்கள்தொகை குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, தேன்கனிக்கோட்டைக்கு நுகர்வோர்கள் அதிகம் வரமாட்டார்கள். ஆகவே, அங்கே சந்தை தொடங்குவது அவசியமில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், எனது மாவட்டத்திற்கு இடையிலே சேலம் மாவட்டம் மட்டும்தான் குறுக்கே இருக்கிறது; நெருங்கிய மாவட்டம்தான். காங்கேயம் தொகுதியைப் பொறுத்தவரையிலே, காங்கேயம் ஒன்றியம், பக்கத்திலே குண்டடம் ஒன்றியம், இரண்டிற்கும் நடுவே காங்கேயம் நகரம் இருக்கிறது. அங்கே சுமார் 40 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே நிறைய விவசாயிகள், தாங்கள் விளைவித்த காய்கறிகளை, தாராபுரம் சந்தைக்கும், ஈரோடு சந்தைக்கும் கொண்டு சென்றுகொண்டிருக்கிறார்கள். எனவே. அங்கே வாங்குகிற சக்தியும் மக்களிடத்திலே நிறைய இருக்கிறது, மக்கள்தொகை இருக்கிறது. விவசாயிகள் விளைவிக்கிற விளைபொருட்களும் நிறைய இருக்கின்றன. எனவே தமிழக அரசு, தலைவர் கலைஞர் தலைமையில் கருணையோடு இருக்கிற அரசு, கண்டிப்பாக, கருணையோடு காங்கேயத்தில் உழவர் சந்தையை அமைக்கத் திட்டம் தீட்டுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

2006 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25–10–1999–ல், முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, இன்றைய முதலமைச்சர் அவர்கள், 100 உழவர் சந்தைகள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டு, அதன் பேரில், 103 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டன. பிறகு வந்த ஆட்சியின் நடவடிக்கை காரணத்தினால், அந்தச் சந்தைகள் சரியாகச் செயல்படாமல், 28 சந்தைகள் மூடப்பட்டுவிட்டன. மற்ற உழவர் சந்தைகளில், வணிகர்கள் சில பேர் உள்ளே நுழைந்துவிட்டார்கள். ஆகவே, இப்போது ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஒரு மாத காலத்திற்குள்ளாக, விவசாயிகளுக்குப் பதிலாக வணிகர்கள் உழவர் சந்தையிலே வியாபாரம் செய்ததையெல்லாம் தடுத்து நிறுத்தி, விவசாயிகளைக் கண்டறிந்து, மீண்டும் புதிய கார்டுகள் வழங்கப்பட்டு, இந்த 103 உழவர் சந்தைகளும் இப்பொழுது நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தேவை எங்கு என்று கோரிக்கை வருகிறதோ, அதை விசாரித்தறிந்து, காய்கறி உற்பத்தியாளர்கள், நுகர்வோர்களுடைய எண்ணிக்கையையும் பார்த்து, தொடங்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால், கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே, கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கிற அரசு, உழவர் சந்தையை சிறப்பாகப் புதுப்பொலிவோடு நடத்திக்கொண்டிருக்கிறது. அதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை இன்னும் கூடுதலாக்க அரசு முன்வருமா? அதேபோன்று, உழவர் சந்தைக்கு விவசாயிகள் எடுத்து வருகிற பொருட்கள் முழுவதையும் அன்றைக்கே விற்பனை செய்ய முடியவில்லை. மறுநாள் விற்பனை செய்வது என்று சொன்னால், காய்கறிகள் வாடிவிடுகிற நிலைமை இருக்கிறது. எனவே, அவற்றைப் பாதுகாப்பதற்கான குளிர்பதன அறை ஏதாவது அங்கே ஏற்படுத்த முடியுமா? அதேபோன்று விவசாயிகள் நலன் கருதி, அந்த உழவர் சந்தையிலேயே விதைகள் விற்பனை மையம் அமைத்துத்தரவேண்டும். அதேபோன்று, மகளிர் சுய உதவிக் குழுக்கள் இப்பொழுது ஏராளமாக உற்பத்தி செய்கிற உணவுப் பொருட்களை விற்பதற்கான அறைகளை

அங்கே ஒதுக்கித் தர முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய செங்கல்பட்டு தொகுதியிலே இருக்கிற செங்கல்பட்டு உழவர் சந்தையைக் கூடுதலாக நவீனப்படுத்த வேண்டும். அதற்குச் சுற்றுச்சுவர்கூட இல்லை. அதையெல்லாம் செய்து கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றதும், பழுதடைந்திருந்த அந்த உழவர் சந்தைகளைச் சீரமைப்பதற்காக 42 இலட்சம் ரூபாய் செலவு செய்து சீரமைத்திருக்கின்றோம். அப்படி இன்னும் ஏதாவது ஒன்றிரண்டு இடங்களிலே அந்தப் பணி நடைபெறாமல் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசாங்கம் பரிசீலிக்கும். ஒரு கணக்கை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றையதினம், 21–8–2006 அன்று, மொத்தம் 71 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 870 மெட்ரிக் டன் காய்கறிகளை 6,054 விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு இப்பொழுது நல்ல முறையிலே உழவர் சந்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து, அவசியமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

திரு. செ. குருசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தை ஈரோட்டில் மட்டும்தான் இருக்கிறது. அந்தியூரிலேயிருந்து ஈரோட்டுக்கு 40 கிலோ மீட்டருக்கு மேலாக விவசாயிகள் சென்று தங்களுடைய விளைபொருட்களை விற்கவேண்டியதாக இருக்கிறபடியினாலே, அந்தியூரிலேயே ஒரு உழவர் சந்தையை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கின்றார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. க. சுந்தர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.